வது வறட்சி நிவாரணப் பணியில் எடுத்துக் கொண்டால் வேலை வாய்ப்புக் கிடைக்கும். இது நீண்டகாலம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே, தனி ஆணை பிறப்பித்து, இந்த ஆண்டே இதனை எடுத்துக் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இதுவும் அதேபோல்தான். ரிவெட்மென்ட் கட்டுவது வறட்சி நிவாரண வேலையின் கீழ் வராது என்று மத்திய அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. என்றாலும், இதன் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்திருக்கிறது; அரசு பரிசிலதது்க் கொண்டிருக்கிறது.

Consumers' Council of Tamil Nadu

*483 *Q.*— THIRU N. K. PALANISAMY : **Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—**

(*a*) whether it is a fact that a delegation of the Consumers' Council of Tamil Nadu met the State Food Minister on 19th April 1974 ; and

(*b*) if so, the details of request made by them?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) இந்திய உபயோகிப்பாளர் கூட்டமைப்பின் நிர்வாகிகள், உணவு விடுதிகளில் விற்கப்படும் தின்பண்டங்களின் விலைகளைக் குறைக்க வேண்டுமென கோரினர்.

திரு. என். கே. பழனிசாமி: சார், இதன்பேரில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? சர்க்கார் உணவுக் கொள்கையாக கன்ஸ்யூமர்ஸ் கோவாபரேடிவ் சொஸைட்டீஸ் ஏற்படுத்துவதாக அறிவிக்கப்பட்டதே, அதுவும் இம்மாதிரிதானா? அதற்கு எவ்வாறு ஏற்பாடு செய்யப் போகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுதே கன்ஸ்யூமர்ஸ் கோவாபரேடிவ்ஸ் நாடு முழுவதும் அமைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் எங்கெங்கே தேவையென்று அமைக்க முன்வருகிறார்களோ, அங்கெல்லாம் கூட்டுறவுத் துறையிலே முயற்சி செய்யலாம். இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையிலும் முன்னாலிருந்த அமைச்சரவர்கள் ஓட்டல் முதலாளிகளைக் கலந்து பேசி உணவு விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுத்தார்கள்.

(முற்பகல் 9-30)

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இந்த கன்ஸ்யூமர்ஸ் கவுன்சில் ஆப் இண்டியா என்ற அமைப்பு அகில இந்திய அளவிலே அமைக்கப்பட்டு அதற்கு நம்முடைய ப்ரெசிடெண்ட் ஆப் இந்தியா பேட்ரன் ஆகவும் மத்திய அமைச்சர் பால கோவிந்த வர்மா தலைவராகவும் இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே அதனுடைய கிளை இருக்கிறது. தமிழ்நாட்டிலே உள்ள இந்தக் கிளைக்கு நான் தலைவராக இருக்கிறேன். நான் நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களையும் முதலமைச்சர் அவர்களையும் சந்தித்துப் பேசி ஓட்டல் அதிபர்களையெல்லாம் விலையைக் குறைக்கும்படி அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அந்த அளவில் 10 பைசா விலை குறைந்தது. ஆனால் இந்த அமைப்புக்கு மாசு ஏற்படுத்த வேண்டுமென்ற முறையிலே, அகில இந்திய அளவில் அமைந்திருக்கிற அமைப்பின் ஒரு அங்கமாக இருக்கிற இந்தக் கிளைக்கு கெட்ட பெயர் வர வேண்டுமென்ற முறையிலே தமிழ்நாட்டிலே வேறு சிலர் அந்தப் பெயரை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அந்த அமைப்பை தடை செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எது அதிகாரபூர்வமான அதிகாரம் பெற்ற அமைப்பு என்று எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அதைப்பற்றி எழுதியனுப்பினால் விசாரிக்கலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, கன்ஸ்யூமர்ஸ் கவுன்சில் ஆப் இண்டியா என்று ஒரே அமைப்புதான் இருக்கிறது. ஆனால் இந்தக் கேள்வியிலேகூட கன்ஸ்யூமர்ஸ் கவுன்சில் ஆப் தமிழ்நாடு என்றுதான் கொடுத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே உள்ள பிராஞ்சுக்கு நான் தலைவராக இருக்கிறேன். கன்ஸ்யூமர்ஸ் கவுன்சில் ஆப் இண்டியா அமைக்கப்பட்டிருப்பதன் அடிப்படையான நோக்கமே பொருள் தரமாகவும் கலப்படம் இல்லாமலும் மலிவாகவும் மக்களுக்குக் கிடைக்கவேண்டுமென்பதுதான். ஆனால் அந்த நோக்கத்திற்கு மாறாக ஒரு அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டுமென்ற முறையிலே ஒரு அமைப்பு ஏற்படுத்தி—நான் ஏற்கனவே கூறியபடி—போலிச் சங்கம் என்ற முறையிலே ஏற்படுத்தியிருக்கிறார்கள், அதை யெல்லாம் தடைசெய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் அதிகாரபூர்வமான அமைப்பின் தலைவர் என்ற முறையிலே முன்னாள் உணவு அமைச்சரைச் சந்தித்துப் பேசி பல விவரங்களைத் தந்திருக்கிறார்கள். இதிலே வேறு யாரும் இந்தப் பெயரிலே செயல்படுகிறார்களா என்பதைப் பற்றி விசாரிக்கலாம்.

THIRU K. M. SUBRAMANIAM : Are the Government aware that there is a separa te organisation posing as Consumers' Productivity Council in Madras City and going to bankers and doing all sorts of things? Are the Government aware that such a thing is happening and what are the steps taken against this? The Bank interest is about 14 per cent now whereas the interest charged by pawnbrokers is 12 per cent. Are the Government aware that there is a serious agitation going on in the City of Madras?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளை யார் செய்தாலும் அதைப் பற்றி போலீசார் கண்காணித்துக் கொள்வார்கள்.

திரு. என். கே. பழனிசாமி : கனம் அமைச்சர் அவர்கள் உணவுக் கொள்கை கன்ஸ்யூமர்ஸ் கோவாப்ரேடிவ் சொஸைடிகளை ஏற்படுத்துவது தான் என்று சொன்னார்கள். அப்படியானால் சர்க்கார் எவ்வாறு கொள் முதல் செய்யப் போகிறார்கள், எவ்வாறு விநியோகம் செய்யப் போகிறார்கள், இருக்கக்கூடிய சொஸைடிகளிலேயே விநியோகம் செய்யப்போகிறார்களா அல்லது புதிதாக சொஸைடிகள் ஏற்படுத்திச் செயல்படப் போகிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கன்ஸ்யூமர்ஸ் கவுன்சில் அமைச்சரைச் சந்தித்ததைப் பற்றிய கேள்வி இது. மாண்புமிகு உறுப்பினர் ப்ரொட்யூஸர்ஸ் கோவாப்ரேடிவ் சொஸைடிஸ் பற்றி கேள்வி கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். உற்பத்தியாளர்களுடைய ஒத்துழைப்பு கிடைக்குமானால் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

Sale of spare parts for buses through Co-operatives.

*484 *Q*.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to arrange for the sale of spare parts and accessories for buses at fair prices through Co-operatives ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், கோயம்புத்தூர் சிந்தாமணி மார்க்கெட்டிலே இம்மாதிரி ஸ்பேர் பார்ட்ஸ் கொடுக்கிறார்கள். வெளியிலே அவற்றின் விலை அதிகமாக இருப்பதால் ஆங்காங்கு உள்ள சூப்பர் மார்க்கெட்டுகளில் இவற்றை விற்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதே 7 இடங்களில் இப்படிப் பட்ட கூட்டுறவு அமைப்புகள் இருக்கின்றன. இதற்கென்று தனியாகவும் மோட்டார் உதிரிப் பாகங்கள் பண்டகசாலை என்ற முறையிலே திருச்சி, சேலம், திருச்செங்கோடு, வேலூர் போன்ற இடங்களிலே அமைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் சொன்னதைப்போல் சிந்தாமணி கூட்டுறவு அங்காடியிலும் சேலம் கூட்டுறவு சிறப்பு அங்காடியிலும் தனிப் பிரிவுகள் இதை விற்பனை செய்து வருகின்றன.